**அ.வ.எண்: 15/2021** **நாள்: 01.09.2025**

வா.சா.1 – நாகராஜன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனது தந்தையார் பெயர் அழகர்சாமி. அவா் தாவா வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி ரிசர்வ் வங்கியில் பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான் அவருக்கு தற்பொழுது என்ன வயது என்றால் 90 வயது ஆகிறது. எனது தாயாரின் பெயர் சகுந்தலா அவர் தற்பொழுது உயிருடன் தான் உள்ளார். 2, 3 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான் அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் இரண்டாவது மனைவி என்றால் சரியல்ல. மணிகண்டன் என்பது யார் என்றால் 6ம் பிரதிவாதியின் மகன் ஆவார். எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி எங்கு உள்ளார் என்றால் அவர் சென்னையில் இருந்து வந்தார் கடந்த பிப்ரவரி மாதம் இறந்துவிட்டார். அவர் இறந்ததற்கு சட்ட வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்துள்ளோம். அது சம்பந்தமாக திருத்தப்பட்ட வழக்குரை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

4 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.